BE

குழந்தைகள் நலன் மற்றும் சிறப்பு சேவைகள் துறை

25/9/26

4794

அனுப்புநர்

திருமதி.கோ.விஜயா, எம்.ஏ.,
மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர்,
மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு,
அண்ணாசாலை,
வேலூர்-1

பெறுநர்

✓1. முதன்மை கல்வி அலுவலர்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
வேலூர் மாவட்டம்
2.மாவட்ட கல்வி அலுவலர்,
வேலூர் மாவட்டம்.
3.மாவட்ட கல்வி அலுவலர்,
Matric Schools,
வேலூர் மாவட்டம்.

க.எண்.782/DCPU/2026, நாள் 23/09/2026

மதிப்பிற்குரிய அம்மையீர்,

பொருள்: குழந்தைகள் நலன் – வேலூர் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு – வேலூர் மாவட்டத்தில் பள்ளிகளில் பயின்றுவரும் ஒற்றை பெற்றோரின் குழந்தைகள், பெற்றோர் இருவரையும் இழந்த குழந்தைகளுக்கு Mission Vatsalya நிதி ஆதரவு திட்டம் மற்றும் அன்பு கரங்கள் திட்டத்தில் பயன்பெற அனைத்து பள்ளிகளுக்கும் சுற்றறிக்கை அனுப்ப கோருதல் தொடர்பாக.

பார்வை: தமிழ்நாடு குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணைய தலைவர் அவர்கள் கூராய்வு கூட்டத்தில் அறிவுறுத்திய நாள் 22/09/2026.

..........

பார்வையில் காணும் தகவலின்படி, மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு மூலம் பள்ளி குழந்தைகளுக்கு கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. Mission Vatsalya நிதி ஆதரவு திட்டம் மற்றும் அன்பு கரங்கள் திட்டத்தில் பயன்பெற கீழ்காணும் விதிகளுக்கு உட்பட்டு வரும் 1.பெற்றோர் இருவரையும் இழந்த குழந்தைகள், 2.இயலாத நிலையில் உள்ள ஒற்றை பெற்றோரின் குழந்தைகள், 3.தீரா வியாதியில் உள்ள ஒற்றை பெற்றோரின் குழந்தைகள், 4.சிறைவாசியின் குழந்தைகள், 5. பெற்றோர் ஒருவரை இழந்து மற்றொருவர் கைவிடப்பட்ட குழந்தைகள்,

6.யாசகத்தில் ஈடுபடும் குழந்தைகள் மற்றும் HIV/AIDS நோய் தொற்றால் பாதிக்கப்பட்ட பெற்றோரின் குழந்தைகள் இத்திட்டங்களில் பயன்பெற தகுதியுடையவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்காணும் விதிமுறைகளைப் பின்பற்றி குழந்தைகளின் விவரங்களை இவ்வலுவலகத்திற்கு வழங்க ஆவணம் செய்யுமாறும் மற்றும் தங்கள் கட்டுப்பாட்டின் கிழ் இயக்கும் அனைத்து பள்ளிகளுக்கும் சுற்றறிக்கை அனுப்பிவைக்குமாறு தங்களை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

23/9/26

மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர்,
வேலூர்.

23/9/26

வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ஓ.மு.எண்.4794/ஆ5/2026 நாள். 23.09.2026

(நகல்)– தக்க நடவடிக்கைக்காக அனைத்து வகை பள்ளிகளுக்கு அனுப்பலாகிறது.

பெறுநர்

அனைத்து வகை பள்ளித் தலைமையாசிரியர்கள்,
வேலூர் மாவட்டம்.

முதன்மைக் கல்வி அலுவலர்
வேலூர்-632 009.

நகல் –

1. மாவட்டக் கல்வி அலுவலர்கள், (இடைநிலை / தனியார் பள்ளிகள்/தொடக்கக்கல்வி) வேலூர் மாவட்டம். (உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு) (இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)